AL/2014/21/T-I 16608

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

**21 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பொருளியலில் ஆராயப்படும் விடயம்,
(1) வளங்களின் அருமைத்தன்மையும் நிறை தொழில் மட்டமுமாகும்.
(2) வளங்களின் அருமைத்தன்மையும் உற்பத்தியுமாகும்.
(3) வளங்களின் அருமைத்தன்மையும் தெரிவுமாகும்.
(4) வளங்களின் அருமைத்தன்மையும் வினைத்திறனுமாகும்.
(5) வளங்களின் அருமைத்தன்மையும் பதிலீட்டுத்தன்மையுமாகும்.

**2.** பொருளியலில் அமையச் செலவென வரைவிலக்கணப்படுத்தப்படுவது,
(1) ஏதேனும் ஒன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட ஏனைய வாய்ப்புகளாகும்.
(2) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செலவிடப்பட்ட பணச் செலவாகும்.
(3) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்பட்ட காலத்தின் செலவாகும்.
(4) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்பட்ட நிலையான மற்றும் மாறும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.
(5) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட அதற்கு அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியாகும்.

**3.** பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டம் ஒன்றின் பண்புகளைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.
A - உற்பத்திச் செலவொன்று இருத்தல் B - அமையச் செலவொன்று இருத்தல்
C - நுகர்வோர் செலவொன்றை ஏற்க நேரிடல் D - குறைந்து செல்லும் எல்லைச் செலவொன்று காணப்படல்
(1) A மற்றும் B (2) A மற்றும் C (3) A, B மற்றும் C (4) A, C மற்றும் D (5) B, C மற்றும் D

**4.** சந்தைப் பொருளாதாரமொன்றில் விலையின் பணிகளாவன,
(1) பங்கீடு செய்தல் மற்றும் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படலாகும்.
(2) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமதியின் கணிப்பீட்டலகாகத் தொழிற்படலாகும்.
(3) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படலாகும்.
(4) ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமதியின் கணிப்பீட்டலகாகத் தொழிற்படலாகும்.
(5) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பங்கீடு செய்தலாகும்.

**5.** சந்தைப் பொருளாதாரமொன்றில் தனிநபர் வருமானங்கள் தீர்மானிக்கப்படுவது,
(1) அரசாங்கத்தின் காரணி விலைக் கொள்கை மற்றும் மானியங்களின் அடிப்படையிலாகும்.
(2) சந்தையில் காரணி விலைகள் மற்றும் தனியார் வருமான வரிகளின் அடிப்படையிலாகும்.
(3) சந்தையில் காரணி விலைகள் மற்றும் அரசாங்கத்தின் சம்பளக் கொள்கையின் அடிப்படையிலாகும்.
(4) காரணிச் சந்தையில் காரணிகளுக்கு நிலவிய விலைகள் மற்றும் அவ்விலைகளில் பரிமாற்றப்படும் தொகைகளின் அடிப்படையிலாகும்.
(5) சொத்துக்களின் உரிமை மற்றும் சந்தையில் காரணி விலைகளின் அடிப்படையிலாகும்.

**6.** உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள புள்ளியொன்றினால் காட்டப்படுவது,
(1) வேலையின்மையாகும். (2) வளங்களின் அருமைத்தன்மையாகும்.
(3) முன்னேற்றமடையாத தொழினுட்பமாகும். (4) வளங்களின் மிகைப் பயன்பாடாகும்.
(5) பயிற்றப்படாத ஊழியம் காணப்படுவதாகும்.

**7.** குறித்த பொருளொன்றின் கேள்விச் சமன்பாடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 200 - 8P$$

இப்பொருளின் விலை ரூ. 10 ஆகும்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி யாது ?
(1) $-6.0$ ஆகும். (2) $-0.66$ ஆகும். (3) $-0.06$ ஆகும். (4) $+0.06$ ஆகும். (5) $+0.66$ ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

8. விலைக் கேள்வி நெகிழ்ச்சியினால் அளவிடப்படுவது,
   (1) கேள்வியைத் தீர்மானிக்கும் காரணியொன்றில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப கேள்வித் தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
   (2) பண்டமொன்றின் விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற்ப கேள்வித் தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
   (3) குறித்த ஒரு பொருளின் கேள்வித் தொகை மற்றொரு பொருளின் விலை மாற்றத்திற்கேற்ப வெளிப்படுத்தும் துலங்கலாகும்.
   (4) உற்பத்திக் காரணியொன்றின் விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற்ப பொருளின் கேள்வித் தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
   (5) விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற்ப கேள்வித் தொகையில் ஏற்படும் அதிகரிப்பாகும்.

9. நிரம்பலாளரொருவர் தனது விற்பனைப் பொருளின் விலையை 10% இனால் அதிகரிப்பதன் மூலம் வருவாயை அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கிறார். இக்குறிக்கோளை அடைய வேண்டுமாயின் மிகப் பொருத்தமானதாக அமைவது,
   (1) விலைக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றை விடக் குறைவாக இருக்க வேண்டும் என்பதாகும்.
   (2) விலைக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றை விடக் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதாகும்.
   (3) விலைக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றுக்கு சமனாக இருக்க வேண்டும் என்பதாகும்.
   (4) விலை நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியமாக இருக்க வேண்டும் என்பதாகும்.
   (5) விலை நிரம்பல் நெகிழ்ச்சியானது பூரண நெகிழ்ச்சியுள்ளதாக அமைய வேண்டும் என்பதாகும்.

10. உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் போன்ற விவசாய விளைபொருள்களின் சந்தை விலைகள் வருடத்தின் சில காலப்பகுதிகளில் உயர்ந்த மட்டத்திலும் வேறு சில காலங்களில் குறைந்த மட்டத்திலும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலைமைக்குப் பிரதான காரணியாக அமைவது,
   (1) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
   (2) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
   (3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
   (4) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
   (5) பூரண நெகிழ்வுள்ள கேள்வியும் பூரண நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.

11. குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| விலை (ரூபா) | கேள்வித் தொகை (அலகு) | நிரம்பல் தொகை (அலகு) |
|---|---|---|
| 80 | 400 | 800 |
| 100 | 200 | 1000 |

கேள்வி நிரம்பல் வளையிகள் நேர்கோடுகளெனக் கருதுக. இப்பொருளின் சமநிலை விலை மற்றும் தொகையினைச் சரியாகக் காட்டும் விடை எது ?

| | சமநிலை விலை | சமநிலைத் தொகை |
|---|---|---|
| (1) | 50 | 500 |
| (2) | 60 | 400 |
| (3) | 60 | 600 |
| (4) | 65 | 300 |
| (5) | 70 | 500 |

12. பொருளொன்றின் நிரம்பல் வளையியானது $Qs = 100 + 10P$ எனத் தரப்பட்டுள்ளது. இப்பொருளின் மீது ரூ. 5 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின் வரியின் பின்னரான நிரம்பல் சமன்பாடு,
   (1) $Qs = 50 + 10P$ ஆகும்.
   (2) $Qs = 100 + 5P$ ஆகும்.
   (3) $Qs = 100 + 15P$ ஆகும்.
   (4) $Qs = 100 + 50P$ ஆகும்.
   (5) $Qs = 500 + 50P$ ஆகும்.

13. நிறுவனமொன்றின் குறுங்கால உற்பத்தி வளையியில் எல்லை உற்பத்தி பூச்சியமாகும்போது,
   (1) மொத்த உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
   (2) சராசரி உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
   (3) சராசரிச் செலவு மிகக் குறைந்த மட்டத்திலிருக்கும்.
   (4) எல்லைச் செலவு மிகக் குறைந்த மட்டத்திலிருக்கும்.
   (5) எல்லை உற்பத்தி சராசரி உற்பத்திக்குச் சமப்படும்.

14. 'அளவுத்திட்ட விளைவு விதி' என்பதனால் கருதப்படுவது,
   (1) உள்ளீடுகளின் விலை மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.
   (2) குறைந்தபட்சம் ஒரு உள்ளீடு நிலையாக உள்ள நிலையில் மாறும் உள்ளீடுகளை மாற்றியமைக்கும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.
   (3) தொழினுட்பம் மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.
   (4) உள்ளீடுகளின் தரம் மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.
   (5) நிறுவனமொன்றின் எல்லா உள்ளீடுகளும் மாற்றமடையும்போது மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**15.** குறுங்காலத்தில் நிறுவனமொன்றின் மொத்தச் செலவு வளையியின் வடிவம் தீர்மானிக்கப்படுவது,
(1) சராசரி நிலையான செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
(2) தொழினுட்பம் மாறும் விதத்தின் அடிப்படையிலாகும்.
(3) சராசரி மொத்தச் செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
(4) மொத்த மாறும் செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
(5) அளவுத்திட்ட விளைவு விதியின் நடத்தையின் அடிப்படையிலாகும்.

**16.** நிறுவனமொன்றின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்கின்ற போதிலும் அது **பூச்சியமாகாதிருக்கக்** காரணம்
(1) மொத்தச் செலவு மாறாதிருப்பதாகும்.
(2) மாறும் செலவொன்று காணப்படுவதாகும்.
(3) சராசரிச் செலவொன்று காணப்படுவதாகும்.
(4) எல்லைச் செலவொன்று காணப்படுவதாகும்.
(5) நிலையான செலவொன்று காணப்படுவதாகும்.

**17.** நிறுவனமொன்றின் குறுங்கால நிரம்பல் வளையியாக அமைவது,
(1) சராசரி மாறும் செலவுக்கு மேற்பட்ட எல்லைச் செலவு வளையியின் பகுதியாகும்.
(2) சராசரி மாறும் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
(3) எல்லைச் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
(4) சராசரி மொத்தச் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
(5) சராசரி மொத்தச் செலவு வளையிக்கு மேற்பட்ட எல்லைச் செலவு வளையியின் பகுதியாகும்.

**18.** ஓரினத்தன்மை வாய்ந்த அல்லது வேறாக்கம் செய்யப்பட்ட பொருள்களை நிரம்பல் செய்யும் பெரிய நிறுவனங்கள் சில காணப்படும்போது அது ஒரு,
(1) இருவர் உரிமைச் சந்தையாகும். (2) தனியுரிமைப் போட்டிச் சந்தையாகும்.
(3) நிறைபோட்டிச் சந்தையாகும். (4) சிலருரிமைச் சந்தையாகும்.
(5) தனியுரிமைச் சந்தையாகும்.

**19.** நிறைபோட்டி நிறுவனமொன்று எதிர்நோக்கும் கேள்வி வளையியானது பூரண நெகிழ்வுள்ளதாக அமைவது,
(1) சந்தையில் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்கள் விற்கப்படுவதனாலாகும்.
(2) நிரம்பலாளன் விலையைத் தீர்மானிப்பவனாக இருப்பதனாலாகும்.
(3) நிரம்பலாளன் விலையை ஏற்போனாக இருப்பதனாலாகும்.
(4) நிரம்பலாளனுக்குத் தேவையான தகவல்கள் கிடைக்காமையினாலாகும்.
(5) விளம்பர நடவடிக்கைகள் இடம்பெறாமையினாலாகும்.

**20.** தனியுரிமை நிறுவனமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியது,
(1) பொருளின் விலை மட்டுமாகும். (2) பொருளின் விலை அல்லது நிரம்பல் தொகை மட்டுமாகும்.
(3) பொருளின் நிரம்பல் தொகை மட்டுமாகும். (4) பொருளின் விலை மற்றும் நிரம்பல் தொகை ஆகிய இரண்டுமாகும்.
(5) பொருளின் உற்பத்திச் செலவு மற்றும் நிரம்பல் தொகை ஆகிய இரண்டுமாகும்.

**21.** நிறுவனமொன்றின் சமநிலை நிர்ணயத்தின்போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனையாவது,
(1) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
(2) எல்லைச் செலவு குறைந்து செல்லும் கட்டத்தின்போது எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
(3) எல்லைச் செலவின் அதிதாழ்ந்த புள்ளியில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
(4) சராசரிச் செலவு அதிகரித்துச் செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படுவதாகும்.
(5) சராசரிச் செலவு குறைந்து செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.

**22.** வர்த்தகச் சகட ஓட்டமொன்றின் அதிதாழ்ந்த புள்ளியிலிருந்து உச்சியை நோக்கி நகர்ந்து செல்லும்போது காணப்படக்கூடிய பண்புகளாவன
(1) உண்மை உற்பத்தி அதிகரித்தல், பணவீக்கம் மற்றும் வேலையின்மை வீழ்ச்சியடைதல்
(2) உண்மை உற்பத்தி அதிகரித்தல், வேலைவாய்ப்பு மற்றும் பணவீக்கம் வீழ்ச்சியடைதல்
(3) உண்மை உற்பத்தி அதிகரித்தல், வேலைவாய்ப்பு மற்றும் பணவீக்கம் அதிகரித்தல்
(4) சாத்திய உற்பத்தி அதிகரித்தல், பணவீக்கம் வீழ்ச்சியடைதல் மற்றும் வேலையின்மை அதிகரித்தல்
(5) உண்மை உற்பத்தி அதிகரித்தல், சாத்திய உற்பத்தி அதிகரித்தல் மற்றும் பணவீக்கம் வீழ்ச்சியடைதல்

**23.** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் தேசிய வருமானம் பற்றிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. (சகல தொகைகளும் ரூபா மில்லியனில்)

| | |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவீடு | 1 200 |
| தனியார் முதலீட்டுச் செலவீடு | 400 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 300 |
| ஏற்றுமதி வருவாய்கள் | 180 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 1 920 |

இப்பொருளாதாரத்தின் வர்த்தக நிலுவையின் பெறுமதி யாது ?
(1) ரூபா −160 மில்லியனாகும். (2) ரூபா −20 மில்லியனாகும். (3) ரூபா 20 மில்லியனாகும்.
(4) ரூபா 80 மில்லியனாகும். (5) ரூபா 160 மில்லியனாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**24.** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகம் 13.5% ஆகவும், பணவீக்க வீதம் 6% ஆகவும், குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.2% ஆகவும் உள்ளதெனக் கருதுக. இப்பொருளாதாரத்தின் தலைக்குரிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகம் யாது ?
(1) −1.2% ஆகும். (2) 1.05% ஆகும். (3) 6.3% ஆகும். (4) 7.05% ஆகும். (5) 7.5% ஆகும்.

**25.** பொருளாதாரமொன்றில் குறிப்பிட்ட ஓர் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியை நிலையான விலைகளில் கணிப்பிடும்போது அது அடியாண்டின் மொத்த தேசிய உற்பத்தியின் பெறுமதியை விடக் கூடுதலாக இருப்பது,
(1) பொதுவிலை மட்டம் வீழ்ச்சியடைவதனாலும் வேலையின்மை அதிகரிப்பதனாலுமாகும்.
(2) பொதுவிலை மட்டம் அதிகரிப்பதாலும் வெளியீடு வீழ்ச்சியடைவதனாலுமாகும்.
(3) பொதுவிலை மட்டம் வீழ்ச்சியடைவதனாலும் வெளியீடு அதிகரிப்பதனாலுமாகும்.
(4) வெளியீடு அதிகரிக்கும் வேகத்தை விடக் கூடுதலான வேகத்தில் பொதுவிலை மட்டம் அதிகரிப்பதனாலாகும்.
(5) பொதுவிலை மட்டம் அதிகரிப்பதனாலும் வேலையின்மை வீழ்ச்சியடைவதனாலுமாகும்.

**26.** பண நிரம்பல் மற்றும் வருமானம் பற்றிய சரியான கூற்று,
(1) பண நிரம்பல் மற்றும் வருமானம் ஆகிய இரண்டும் பாய்ச்சல்களாகவும் இருப்புக்களாகவும் உள்ளன.
(2) பண நிரம்பல் ஒரு பாய்ச்சலாக அமையும் அதேவேளை வருமானம் ஓர் இருப்பாகும்.
(3) பண நிரம்பல் மற்றும் வருமானம் ஆகிய இரண்டுமே பாய்ச்சல்களாகும்.
(4) பண நிரம்பல் மற்றும் வருமானம் ஆகிய இரண்டுமே இருப்புக்களாகும்.
(5) பண நிரம்பல் ஓர் இருப்பாகவும் வருமானம் ஒரு பாய்ச்சலாகவும் உள்ளமையாகும்.

**27.** ஒரு நாட்டின் பணத்துக்கான கேள்வி தீர்மானிக்கப்படுவது,
(1) வட்டி வீதம் மற்றும் உயர்வலுப் பணத்தின் அளவினாலாகும்.
(2) பணப் பெருக்கியின் பெறுமதி மற்றும் வட்டி வீதத்தினாலாகும்.
(3) வட்டி வீதம் மற்றும் வேலையின்மையினாலாகும்.
(4) மெய் வருமானம் மற்றும் வட்டி வீதத்தினாலாகும்.
(5) உயர்வலுப் பணத்தின் அளவு மற்றும் பணப் பெருக்கியின் பெறுமதியினாலாகும்.

**28.** விலை மட்டத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியினால்,
(1) பணத்தின் பெறுமதியில் பாதிப்பு ஏற்படாது.
(2) பணத்தின் பெறுமதி அதிகரிக்கும்.
(3) பணத்தின் பெறுமதியில் நீண்டகாலப் பாதிப்பு ஏற்படாது.
(4) பணத்தின் பெறுமதியில் குறுங்காலத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாது.
(5) பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும்.

**29.** இலங்கையின் பணநிரம்பலில் $M_{2b}$ கூறு பெறப்படுவது,
(1) உயர்வலுப் பணத்துடன் வெளிநாட்டுப் பண வைப்புகளைக் கூட்டுவதன் மூலமாகும்.
(2) கேள்வி வைப்புகளுடன் வெளிநாட்டுப் பண வைப்புகளைக் கூட்டுவதன் மூலமாகும்.
(3) நிலையான வைப்புகளுடன் வெளிநாட்டுப் பண வைப்புகளைக் கூட்டுவதன் மூலமாகும்.
(4) குறுகிய பண நிரம்பலுடன் வணிக வங்கிகளிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புகளைக் கூட்டுவதன் மூலமாகும்.
(5) விரிந்த பண நிரம்பலுடன் வெளிநாட்டுப் பண வைப்புகளைக் கூட்டுவதன் மூலமாகும்.

**30.** திறந்த பொருளாதாரமொன்றில் பேரினப் பொருளாதார உறுதிப்பாடு மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுவது,
(1) விலை மட்டம் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்றுவீதத்தின் மூலமாகும்.
(2) விலை மட்டம் மற்றும் வேலைவாய்ப்பு வீதத்தின் மூலமாகும்.
(3) வெளிநாட்டு நாணய மாற்றுவீதம் மற்றும் வேலைவாய்ப்பு வீதத்தின் மூலமாகும்.
(4) சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு நாணய மாற்றுவீதத்தின் மூலமாகும்.
(5) பணவீக்கம் மற்றும் வேலையின்மை வீதத்தின் மூலமாகும்.

**31.** பொருளாதாரமொன்றில் வட்டி வீதத்தைக் குறைப்பதன் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் பேரினப் பொருளியல் இலக்குகளில் ஒன்று,
(1) முதலீடு அதிகரித்து விலை மட்டம் அதிகரித்து நுகர்வு வீழ்ச்சியடைவதாகும்.
(2) முதலீடு அதிகரிப்பதன் காரணமாக மொத்தக் கேள்வி அதிகரித்து பொருளாதாரத்தின் உற்பத்தி அதிகரிப்பதாகும்.
(3) நுகர்வும் முதலீடும் அதிகரித்து நிறுவனங்களின் இலாபம் அதிகரிப்பதாகும்.
(4) சேமிப்பு அதிகரித்து நுகர்வு வீழ்ச்சியடைந்து அரசாங்கத்தின் வரி வருவாய் அதிகரிப்பதாகும்.
(5) பங்கு விலைகள் அதிகரித்து நிறுவனங்களின் இலாபம் அதிகரித்து புதிய முதலீடுகள் உருவாகுதலாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

32. விரிவாக்கப் பணக் கொள்கை மற்றும் விரிவாக்க இறைக் கொள்கைகளுக்கு உதாரணமாக அமைவது,
(1) நியதி ஒதுக்கு வீதத்தை அதிகரித்தல் மற்றும் வரி வீதங்களைக் குறைத்தல்
(2) திறந்த சந்தையில் மத்திய வங்கியினால் அரச பிணையங்கள் விற்கப்படல் மற்றும் வரி வீதங்களைக் குறைத்தல்
(3) நியதி ஒதுக்கு வீதத்தை அதிகரித்தல் மற்றும் அரசாங்கத்தின் கொள்வனவுகளை அதிகரித்தல்
(4) திறந்த சந்தையில் மத்திய வங்கியினால் அரச பிணையங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வரி வீதங்களைக் குறைத்தல்
(5) வட்டி வீதங்களை அதிகரித்தல் மற்றும் அரசாங்கத்தின் கொள்வனவுகளை அதிகரித்தல்

33. பொதுப் பொருள்கள் சந்தை முறையினால் **வழங்கப்படாதிருக்கக்** காரணம்,
(1) நுகர்வின்போது செலவொன்று ஏற்பட்ட போதிலும் இலாபம் உழைக்க முடியாமையாகும்.
(2) விலை அறவிட முடியாமை மற்றும் நுகர்வில் போட்டித்தன்மை காணப்படாமையாகும்.
(3) விலை செலுத்தாதோரை நுகர்விலிருந்து விலக்க முடியாமை மற்றும் நுகர்வில் போட்டித்தன்மை காணப்படாமையாகும்.
(4) இலாபம் உழைக்க முடிந்த போதிலும் நுகர்வின்போது செலவொன்று ஏற்படுவதனாலாகும்.
(5) விலை அறவிட முடியுமாயினும் அதனை இலகுவில் செயற்படுத்திட முடியாமையாகும்.

34. "இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் அரச பொதுப்படுகடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் குறைவடைந்து செல்லும் போக்கினைக் காட்டுகின்றன." இதற்குப் பிரதான காரணம் யாதெனில்,
(1) மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையாக உள்ளபோது அரச கடன்கள் வீழ்ச்சியடைவதாகும்.
(2) அரச கடன்கள் வீழ்ச்சியடைதல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தலாகும்.
(3) அரச கடன்கள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடைவதாகும்.
(4) அரச கடன்கள் நிலையாக உள்ளபோது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தலாகும்.
(5) அரச கடன்கள் அதிகரித்துச் செல்லும் அளவை விடக் கூடுதலாக மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதனாலாகும்.

35. தனியார் நன்மைகளை விடச் சமூக நன்மைகள் அதிகமாகக் காணப்படுவது,
(1) கல்வி மற்றும் சுகாதார சேவைகளிலாகும்.
(2) உட்கட்டமைப்பு மற்றும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிலாகும்.
(3) துறைமுகம் மற்றும் விமான நிலையச் சேவைகளிலாகும்.
(4) பெருந்தெருக்கள் மற்றும் வைத்தியசாலைச் சேவைகளிலாகும்.
(5) தேசிய பூங்காக்கள் மற்றும் சூழற் பாதுகாப்பு நடவடிக்கைகளிலாகும்.


36. உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் தொடர்புடைய நிரம்பல் பக்க ஊக்குவிப்புக் கொள்கை நடைமுறைகளாவன,
(1) உற்பத்தி மானியங்கள், நிர்வாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் மக்கள் மயப்படுத்தல்
(2) வரிச் சீர்திருத்தங்கள், மக்கள் மயப்படுத்தல், நிர்வாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், ஊழிய மற்றும் மூலதனச் சந்தை இறுக்கத்தன்மையை நீக்குதல்
(3) நிர்வாகக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தல், வரிச் சீர்திருத்தங்கள், நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரித்தல் அத்துடன் ஊழிய மற்றும் மூலதனச் சந்தைகளில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தல்
(4) உற்பத்தி மானியங்கள், நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரித்தல், நிர்வாகக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல் மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்தல்
(5) வரிச் சீர்திருத்தங்கள், தனியார் மயப்படுத்தல், நிர்வாகக் கட்டுப்பாடுளைத் தளர்த்துதல், ஊழிய மற்றும் மூலதனச் சந்தைகளில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தல்

37. அண்மைய் ஆண்டுகளில் இலங்கைப் பொருளாதாரத்தில் உயர்ந்த வளர்ச்சி வேகத்தைப் பதிவுசெய்த துறைகளாவன,
(1) போக்குவரத்து, மொத்த, சில்லறை வர்த்தகம் மற்றும் தகவல் தொடர்பாடல் என்பனவாகும்.
(2) சுற்றுலாத்துறை, ஆடைத் தயாரிப்புத்துறை, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் தயாரிப்புத்துறை என்பனவாகும்.
(3) கட்டுமானத்துறை, ஹோட்டல்களும் விடுதிகளும், கல்லுடைத்தலும் சுரங்கத்தொழிலுமாகும்.
(4) கட்டுமானத்துறை, ஆடைத் தயாரிப்புத்துறை மற்றும் மொத்த, சில்லறை வர்த்தகத்துறை என்பனவாகும்.
(5) ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள், சுற்றுலாத்துறை மற்றும் போக்குவரத்து என்பனவாகும்.

38. முழு வறுமையையும் சார்பு வறுமையையும் அளவிடப் பயன்படுத்தக்கூடிய இரு சுட்டெண்கள் முறையே
(1) கிணி குணகம் மற்றும் வீட்டுத்துறையின் மின்சார நுகர்வு என்பனவாகும்.
(2) வருமானத்தின் தசமப் பிரிவுகள் (income percentiles) மற்றும் கிணி குணகம் என்பனவாகும்.
(3) வீட்டுத்துறை வருமான மட்டம் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் என்பனவாகும்.
(4) வறுமை மட்டம் (poverty line) மற்றும் கிணி குணகம் என்பனவாகும்.
(5) தாய்மார் போசணை மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் என்பனவாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**39.** குறித்த பொருளொன்றின் சந்தைச் சமநிலையும் இறக்குமதி நிரம்பல் வளையியும் பின்வரும் வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன.




இவ்வரைபடத்தின்படி இறக்குமதி நிரம்பல் காரணமாக சமூகத்திற்குக் கிடைக்கும் மேலதிக நன்மையைக் காட்டும் பகுதி,

(1) A மற்றும் B ஆகும்.
(2) B மற்றும் C ஆகும்.
(3) B மற்றும் G ஆகும்.
(4) C மற்றும் F ஆகும்.
(5) G, C மற்றும் F ஆகும்.

**40.** பின்வருவனவற்றுள் நாடுகளிடையே வர்த்தகம் இடம்பெறக் காரணமாக **அமையாதது,**

(1) நாடுகளிடையே காரணிக் கிடைப்பனவில் நிலவும் வேறுபாடாகும்.
(2) நாடுகளிடையே வெளிநாட்டு நாணய மாற்றுவீத வேறுபாடுகள் காணப்படுவதாகும்.
(3) நாடுகளிடையே தொழினுட்ப வேறுபாடுகள் காணப்படுவதாகும்.
(4) உற்பத்தியில் அளவுத்திட்டச் சிக்கனங்கள் நிலவுவதாகும்.
(5) நாடுகளிடையே நுகர்வோன் சுவை மற்றும் விருப்பத் தேர்வுகளில் வேறுபாடுகள் காணப்படுவதாகும்.

**41.** குறிப்பிட்ட பொருளாதாரமொன்றின் தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **தனிநபர் வருமானம் (ஐக்கிய அமெரிக்க டொலர்களில்)** | **கினி குணகம்** |
|---|---|---|
| 2011 | 2 400 | 0.46 |
| 2012 | 2 800 | 0.47 |
| 2013 | 3 200 | 0.48 |

இப்பொருளாதாரம் பற்றிய சரியான கூற்று,

(1) பொருளாதார விரிவாக்கத்துடன் வருமான ஏற்றத்தாழ்வு குறைவடைந்துள்ளது என்பதாகும்.
(2) பொருளாதாரச் சுருக்கத்துடன் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளது என்பதாகும்.
(3) பொருளாதாரச் சுருக்கத்துடன் வருமான ஏற்றத்தாழ்வு குறைவடைந்துள்ளது என்பதாகும்.
(4) பொருளாதார விரிவாக்கத்துடன் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளது என்பதாகும்.
(5) பொருளாதார விரிவாக்கமோ வருமான ஏற்றத்தாழ்வில் வீழ்ச்சியோ ஏற்படவில்லை என்பதாகும்.

**42.** பேண்தகு அபிவிருத்தியின் பிரதான பரிமாணங்களாவன,

(1) பொருளாதார அபிவிருத்தி, எதிர்கால சந்ததிக்காக வளங்களை மீதப்படுத்தல் மற்றும் வருமான ஏற்றத்தாழ்வு குறைவடைதல்
(2) பொருளாதார அபிவிருத்தி, சமூகத்தின் தரம் உயர்தல் மற்றும் வருமான எற்றத்தாழ்வு குறைவடைதல்
(3) சமூகத்தின் தரம் உயர்தல், வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சி மற்றும் சூழற் பாதுகாப்பு
(4) சூழற் பாதுகாப்பு, அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சி (inclusive growth) மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரித்தல்
(5) பொருளாதார அபிவிருத்தி, சமூகத்தின் தரம் உயர்தல் மற்றும் சூழற் பாதுகாப்பு

**43.** தரப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டு இலங்கையிலும் இந்தியாவிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வெளியீட்டளவுகள் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| **பொருள்** | **இலங்கை** | **இந்தியா** |
|---|---|---|
| தேயிலை (அலகுகள்) | 100 | 90 |
| ஆடைகள் (அலகுகள்) | 120 | 100 |

மேற்படி தவல்களின்படி சரியான கூற்று

(1) இந்தியா தேயிலை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையின்மையைக் கொண்டுள்ளது.
(2) இலங்கை ஆடை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.
(3) இந்தியா தேயிலை உற்பத்தியில் முழு நன்மையைக் கொண்டுள்ளது.
(4) இரு நாடுகளும் இரு பொருள்களின் உற்பத்தி தொடர்பில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளன.
(5) இந்தியாவுக்கு இரு பொருள்கள் தொடர்பிலும் ஒப்பீட்டு நன்மை கிடையாது.

[பக். 7 ஐப் பார்க்க

**44.** அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்திற்கு பங்களிப்புச் செய்த **ஐந்து** பிரதான மூலாதாரங்களும் எவை ?

(1) ஆடைகள், தேயிலை, தெங்கு, இரத்தினக் கற்கள் மற்றும் கணினி மென்பொருள்கள்
(2) ஆடைகள், தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் கணினி மென்பொருள்கள்
(3) வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள், ஆடைகள், சுற்றுலாத் தொழில் வருவாய்கள், தேயிலை மற்றும் இறப்பர்
(4) வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள், ஆடைகள், கணினி மென்பொருள்கள், சுற்றுலாத் தொழில் வருவாய்கள் மற்றும் தேயிலை
(5) இரத்தினக் கற்களும் ஆபரணங்களும், தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் கனியவகை

**45.** பின்வரும் நபர்களில் வேலையற்றிருக்கும் ஒருவராகக் கருதப்படத்தக்கவர் யார் ?

(1) பட்டப்படிப்பின் பின்னர் தனியார் துறையில் எழுதுவினைஞராகப் பணிபுரியும் ஒருவர்
(2) முதிய பெற்றோரைப் பராமரிக்கும் நோக்கில் தொழிலைக் கைவிடும் ஒருவர்
(3) உயர் கல்வியின் பொருட்டு நிலையான தொழிலிலிருந்து விலகும் ஒருவர்
(4) பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக வீட்டிலிருந்தபோதிலும் தற்போது தொழிலொன்றைத் தேடும் பெண் ஒருவர்
(5) பரீட்சைக் காலத்தின்போது தமது குடும்பப் பண்ணை வேலைகளில் ஈடுபடாத பாடசாலை மாணவர் ஒருவர்

**46.** அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் தொழிற்படையில் பங்குகொள்ளல் வீதத்தில் ஏற்பட்ட பிரதான மாற்றமாக அமைவது,

(1) தொழிற்படையில் பெண்களின் பங்குகொள்ளல் வீதம் அதிகரித்தமையாகும்.
(2) தொழிற்படையில் பங்குகொள்ளல் வீதம் வீழ்ச்சியடைந்தமையாகும்.
(3) தொழிற்படையில் ஆண்களின் பங்குகொள்ளல் வீதம் அதிகரித்தமையாகும்.
(4) பெண்கள் தொழில்புரியும் வீதம் வீழ்ச்சியடைந்தமையாகும்.
(5) ஆண்களில் வேலையின்மை வீதம் கணிசமானளவு அதிகரித்தமையாகும்.

**47.** இலங்கையில் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணைக் குறுகிய காலத்தில் அதிகரிக்கச் செய்ய வேண்டுமாயின் இன்னும் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய சுட்டெண்கள் யாவை ?

(1) தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் மற்றும் பிறப்பின்போது ஆயுள் எதிர்பார்க்கை
(2) எழுத்தறிவு வீதம் மற்றும் தாய் மரண வீதம்
(3) தாய் மரண வீதம் மற்றும் சிசு மரண வீதம்
(4) தனிநபர் வருமானம் மற்றும் பாடசாலை இடைவிலகல் வீதம்
(5) கல்வியில் பங்குபற்றுவோர் வீதம் மற்றும் கொள்வனவு சக்தி சமமதிப்பில் கணிப்பிடப்பட்ட தனிநபர் வருமானம்

**48.** 2012ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம், வேலையின்மை வீதம் மற்றும் பணவீக்க வீதம் என்பவற்றைக் காட்டும் சரியான விடை யாது ?

| | பொருளாதார வளர்ச்சி வீதம் (%) | வேலையின்மை வீதம் (%) | பணவீக்க வீதம் (%) |
|---|---|---|---|
| (1) | 5.6 | 5.5 | 8.0 |
| (2) | 7.5 | 6.0 | 4.0 |
| (3) | 7.0 | 8.9 | 9.0 |
| (4) | 6.4 | 4.0 | 7.6 |
| (5) | 8.3 | 8.9 | 4.0 |

**49.** இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிப் பயிற்றப்படாத பெண் தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் குடிபெயர்ந்து செல்லும்போது ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைக்கும் பொருட்டு அரசாங்கத்தால் அண்மையில் எடுக்கப்பட்டுள்ள கொள்கைத் தீர்மானங்களாவன

(1) வெளிநாட்டில் சேவையாற்றுவதற்கான கால உச்சவரம்பினை நிர்ணயித்தல் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பேண வேண்டிய குறைந்தபட்ச மீதியினை நிர்ணயித்தல்
(2) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றை ஆரம்பித்தல், குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்கான தொழில் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்
(3) குறைந்தபட்ச வயதெல்லையை நிர்ணயித்தல் மற்றும் குடும்பப் பின்னணி பற்றிய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்
(4) குறைந்தபட்ச வயதெல்லையை நிர்ணயித்தல் மற்றும் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்கான தொழில் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்
(5) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றை ஆரம்பித்தல் மற்றும் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்கான கால உச்சவரம்பினை நிர்ணயித்தல்

**50.** உலகமயமாக்கலின் பிரதான இயங்கு விசைகளாகக் கருதப்படுபவை,

(1) போக்குவரத்துத்துறையின் வளர்ச்சி, பாதுகாப்புவாத வர்த்தகக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்பனவாகும்.
(2) பாதுகாப்புவாத வர்த்தகக் கொள்கைகளை நீக்குதல் மற்றும் தொழினுட்ப முன்னேற்றம் என்பனவாகும்.
(3) பல்தேசியக் கம்பனிகளின் பரம்பல் மற்றும் ஊழியச் சந்தையில் இறுக்கத்தன்மைகள் காணப்படல் என்பனவாகும்.
(4) பொருளாதாரங்கள் ஒருங்கிணைதல் (economic integration) மற்றும் பாதுகாப்புவாத வர்த்தகக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்பனவாகும்.
(5) சந்தை நிர்வாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் (deregulation) மற்றும் நிறைவில் போட்டி நிலவுகின்றமை என்பனவாகும்.

* * *

16608

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2014**

| | | | |
|---|---|---|---|
| ආර්ථික විද්‍යාව II<br>பொருளியல் II<br>Economics II | 21 T II | | පැය තුනයි<br>**மூன்று மணித்தியாலம்**<br>*Three hours* |

**அறிவுறுத்தல்கள் :**

* உப பிரிவு **'அ'**, உப பிரிவு **'ஆ'** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) சமூகங்கள் எப்போதும் தெரிவுப் பிரச்சினைக்கு முகங்கொடுப்பதேன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) முயற்சியாண்மையானது ஏனைய உற்பத்திக் காரணிகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ? (04 புள்ளிகள்)

(iii) 'மூலதனம்', 'முதலீடு' என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) நாடொன்றில் மனித வளத்தின் விளைதிறனை மேம்படுத்த மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் எவை ? (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரமொன்றில் உற்பத்தித் தொழினுட்பத்தைத் தெரிவு செய்வது பற்றிய பிரச்சினை தீர்க்கப்படும் விதத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

**2.** (i) உற்பத்தி இயல்தகவு வளையி என்றால் என்ன என்பதை வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) உற்பத்தி வளங்களைப் பயன்படுத்தும்போது கூடிச்செல்லும் அமையச் செலவு ஏற்படுவதற்கான காரணங்கள் எவையென விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி இயல்தகவு வளையி வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(அ) நாட்டிலிருந்து வெளியேறிய தொழில்வாண்மையாளர்களில் கணிசமான எண்ணிக்கையினர் நாடு திரும்புதல் (02 புள்ளிகள்)

(ஆ) இயற்கை அனர்த்தமொன்றின் காரணமாக நாட்டின் மூலதன வளங்கள் அழிவடைதல் (02 புள்ளிகள்)

(இ) பாதைக் கட்டமைப்பு விரிவாக்கப்பட்டதன் காரணமாக இதுவரை காலமும் பயன்படுத்தப்படாதிருந்த கிராமிய வளங்கள் உற்பத்தியில் பயன்பாட்டுக்கு உட்படல் (02 புள்ளிகள்)

(ஈ) ஆடைக் கைத்தொழிலுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாக் கைத்தொழிலானது துரித வேகத்தில் விரிவாக்கமடைதல் (02 புள்ளிகள்)

(iv) பொருளாதாரமொன்றில் தரப்பட்ட தொழினுட்பத்தின்கீழ் நாட்டின் வளங்களை பூரண வேலைவாய்ப்பில் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யக்கூடிய X மற்றும் Y ஆகிய பொருள்களின் சேர்க்கைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| உற்பத்திச் சேர்க்கை | X பொருள் - அலகுகள் | Y பொருள் - அலகுகள் |
|---|---|---|
| A | 0 | 150 |
| B | 20 | 140 |
| C | 40 | 125 |
| D | 60 | 105 |
| E | 80 | 70 |
| F | 100 | 0 |

(அ) இப்பொருளாதாரத்தின் உற்பத்திச் சேர்க்கைப் புள்ளிகளிடையே (A–B, B–C, C–D, D–E மற்றும் E–F) பொருளின் அமையச் செலவினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேற்படி அட்டவணைக்கமைய X பொருளின் 40 அலகுகளையும் Y பொருளின் 60 அலகுகளையும் கொண்ட சேர்க்கையினை உற்பத்தி செய்யும் நிலைமையிலிருந்து X பொருளின் 60 அலகுகளையும் Y பொருளின் 80 அலகுகளையும் கொண்ட சேர்க்கையினை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாற்றமடையும்போது அமையச் செலவொன்று காணப்படுமா ? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

3. (i) செல்லிடத் தொலைபேசிகளுக்கான சந்தைக் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)
(ii) பொருளொன்றின் விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையிலான நேர்த் தொடர்பினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)
(iii) பொருளொன்றின் நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் 'ஏனைய பொருள்களின் விலை' என்பதனால் கருதப்படுவதென்ன ? (05 புள்ளிகள்)
(iv) "சுதந்திரமான சந்தை ஒன்றில் சமநிலையொன்று ஏற்பட வேண்டுமாயின் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையினை விடக் குறைந்தபட்ச நிரம்பல் தொகையானது குறைவாக இருத்தல் வேண்டும்." இக்கூற்றை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

4. குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Qd = 150 - 5P$ (கேள்விச் சமன்பாடு)

$Qs = 75 + 10P$ (நிரம்பல் சமன்பாடு)

மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
(i) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை (02 புள்ளிகள்)
(ii) சந்தைச் சமநிலையின்போது நிலவும் நுகர்வோன் மிகையின் பெறுமதி (03 புள்ளிகள்)
(iii) சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகங்களின் பெறுமதி (04 புள்ளிகள்)
(iv) அரசாங்கத்தினால் இப்பொருளின் மீது ரூ. 1.50 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின்,
(அ) வரியின் பின்னரான புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை (02 புள்ளிகள்)
(ஆ) அரசாங்கத்தின் வரி வருவாய் (03 புள்ளிகள்)
(இ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் மாற்றத்தின் அளவு (03 புள்ளிகள்)
(ஈ) வரியின் காரணமாக சமூகத்திற்கு ஏற்படும் நலன் இழப்பின் அளவு (03 புள்ளிகள்)

5. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் ஒரு வருட காலப்பகுதிக்குரிய தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன. (சகல பெறுமதிகளும் ரூபா மில்லியனில்)

| | |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவீடு | 800 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 150 |
| இறக்குமதிகள் | 60 |
| உள்நாட்டு தனியார் முதலீடு | 200 |
| வெளிநாட்டுக் காரணி வருவாய் | 40 |
| கையிருப்பு மாற்றங்கள் | 50 |
| பெறுமானத்தேய்வு | 40 |
| ஏற்றுமதிகள் | 80 |
| வெளிநாட்டுக் காரணிச் செலுத்தல்கள் | 60 |
| மூலப்பொருள் கொள்வனவு | 20 |
| பங்குகளையும் பிணையங்களையும் கொள்வனவு செய்தல் | 15 |

(i) இப்பொருளாதாரத்தின்
(அ) மொத்தக் கேள்விச் சமன்பாட்டைப் பெறுக. (03 புள்ளிகள்)
(ஆ) மொத்த உள்நாட்டுச் செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)
(இ) மொத்தத் தேசிய செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ஈ) தேறிய தேசிய செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ii) எளிய பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதாரச் சமநிலையினை வரைபடமொன்றைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)
(iii) எளிய முதலீட்டுப் பெருக்கியானது தேசிய வருமானத்தைத் தீர்மானிப்பதில் எத்தகைய செல்வாக்கினைக் கொண்டுள்ளது ? உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) பரிமாற்ற நோக்கப் பணக் கேள்விக்கும் வருமானத்திற்கும் இடையிலான தொடர்பினை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) நாடொன்றின் பண நிரம்பலைத் தீர்மானிக்கும்போது கடன் அட்டைகளைக் (credit cards) கவனத்திற் கொள்வதற்கும் செலவு அட்டைகளைக் (debit cards) கவனத்திற் கொள்ளாமைக்குமான காரணத்தை விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் எவை ? இக்குறிக்கோள்களை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என விளக்குக. (05 புள்ளிகள்)
(iv) நாடொன்றின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் பண்புசார் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

7. (i) சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் பிரதான வகிபாகத்தை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) பொருளாதார வகைப்படுத்தலுக்கு அமைய அரசாங்க செலவீடுகளை வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)
(iii) இலங்கையில் அரச பாதீட்டுக் குறைநிலையினை நிதியீட்டம் செய்வதற்கு அண்மைக் காலத்திற் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலாதாரங்கள் யாவை ? (05 புள்ளிகள்)
(iv) இலங்கையின் அரச பொதுப்படுகடன் வீதத்தின் அண்மைக்காலப் போக்கினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

8. இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் இயந்திரங்கள் மற்றும் ஆடைகள் ஆகிய இரு பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. தரப்பட்ட அளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தி இரு நாடுகளும் உற்பத்தி செய்யக்கூடிய இரு பொருள்களினதும் கருதுகோள் ரீதியான அளவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாடு | இயந்திரங்கள் (அலகுகள்) | ஆடைகள் (அலகுகள்) |
|---|---|---|
| சீனா | 50 | 150 |
| இலங்கை | 10 | 50 |

மேற்படி அட்டவணையிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் பகுதி (i), (ii) ஆகியவற்றுக்கு விடை தருக.
(i) இவ்விரு நாடுகளில் எந்நாடு, எப்பொருள் தொடர்பில் சிறக்குமியல்பு பெற வேண்டும் ? விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) சிறக்குமியல்பின் பின்னர் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மாற்று விகிதம் யாது ? (05 புள்ளிகள்)
(iii) தாராள வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கப் பயன்படும் தீர்வைத் தடைகள் மற்றும் தீர்வையல்லாத் தடைகள் எவை ? (05 புள்ளிகள்)
(iv) தாராள வர்த்தகத்தின் மீது நாடுகள் தடைகளை விதிப்பது ஏன் என விளக்குக. (05 புள்ளிகள்)

9. (i) பொருளாதார வளர்ச்சியை வரைவிலக்கணப்படுத்துக. அது எவ்வாறு அளவிடப்படும் ? (05 புள்ளிகள்)
(ii) நாடொன்றில் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த வகையில் தேசிய உற்பத்தியில் ஏற்படக்கூடிய கட்டமைப்பு மாற்றங்களை விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) 'பொருளாதார அபிவிருத்தியானது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும்.' விளக்குக. (05 புள்ளிகள்)
(iv) இலங்கையில் வறுமையின் அண்மைக்காலப் போக்குகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

10. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தீர்மானித்த பிரதான காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)
(ii) இலங்கைப் பொருளாதாரத்தில் சேவைத்துறையின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) இலங்கையின் கைத்தொழிற்துறையில் உயர்வான வளர்ச்சியை ஏற்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை ? (05 புள்ளிகள்)
(iv) இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதான கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

* * *

AL/2014/21/T-I

16608

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | |
|---|---|---|
| ආර්ථික විද්‍යාව I<br>பொருளியல் I<br>Economics I | 21 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பொருளியலில் ஆராயப்படும் விடயம்,
(1) வளங்களின் அருமைத்தன்மையும் நிறை தொழில் மட்டமுமாகும்.
(2) வளங்களின் அருமைத்தன்மையும் உற்பத்தியுமாகும்.
(3) வளங்களின் அருமைத்தன்மையும் தெரிவுமாகும்.
(4) வளங்களின் அருமைத்தன்மையும் வினைத்திறனுமாகும்.
(5) வளங்களின் அருமைத்தன்மையும் பதிலீட்டுத்தன்மையுமாகும்.

**2.** பொருளியலில் அமையச் செலவென வரைவிலக்கணப்படுத்தப்படுவது,
(1) ஏதேனும் ஒன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட ஏனைய வாய்ப்புகளாகும்.
(2) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு செலவிடப்பட்ட பணச் செலவாகும்.
(3) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்பட்ட காலத்தின் செலவாகும்.
(4) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்பட்ட நிலையான மற்றும் மாறும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.
(5) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட அதற்கு அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியாகும்.

**3.** பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டம் ஒன்றின் பண்புகளைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.
A - உற்பத்திச் செலவொன்று இருத்தல் B - அமையச் செலவொன்று இருத்தல்
C - நுகர்வோர் செலவொன்றை ஏற்க நேரிடல் D - குறைந்து செல்லும் எல்லைச் செலவொன்று காணப்படல்
(1) A மற்றும் B (2) A மற்றும் C (3) A, B மற்றும் C (4) A, C மற்றும் D (5) B, C மற்றும் D

**4.** சந்தைப் பொருளாதாரமொன்றில் விலையின் பணிகளாவன,
(1) பங்கீடு செய்தல் மற்றும் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படலாகும்.
(2) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமதியின் கணிப்பீட்டலகாகத் தொழிற்படலாகும்.
(3) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமானத்திரட்டாகத் தொழிற்படலாகும்.
(4) ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பெறுமதியின் கணிப்பீட்டலகாகத் தொழிற்படலாகும்.
(5) சமிக்ஞை வழங்கல், ஊக்குவிப்பு வழங்கல் மற்றும் பங்கீடு செய்தலாகும்.

**5.** சந்தைப் பொருளாதாரமொன்றில் தனிநபர் வருமானங்கள் தீர்மானிக்கப்படுவது,
(1) அரசாங்கத்தின் காரணி விலைக் கொள்கை மற்றும் மானியங்களின் அடிப்படையிலாகும்.
(2) சந்தையில் காரணி விலைகள் மற்றும் தனியார் வருமான வரிகளின் அடிப்படையிலாகும்.
(3) சந்தையில் காரணி விலைகள் மற்றும் அரசாங்கத்தின் சம்பளக் கொள்கையின் அடிப்படையிலாகும்.
(4) காரணிச் சந்தையில் காரணிகளுக்கு நிலவிய விலைகள் மற்றும் அவ்விலைகளில் பரிமாற்றப்படும் தொகைகளின் அடிப்படையிலாகும்.
(5) சொத்துக்களின் உரிமை மற்றும் சந்தையில் காரணி விலைகளின் அடிப்படையிலாகும்.

**6.** உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள புள்ளியொன்றினால் காட்டப்படுவது,
(1) வேலையின்மையாகும். (2) வளங்களின் அருமைத்தன்மையாகும்.
(3) முன்னேற்றமடையாத தொழினுட்பமாகும். (4) வளங்களின் மிகைப் பயன்பாடாகும்.
(5) பயிற்றப்படாத ஊழியம் காணப்படுவதாகும்.

**7.** குறித்த பொருளொன்றின் கேள்விச் சமன்பாடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 200 - 8P$$

இப்பொருளின் விலை ரூ. 10 ஆகும்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி யாது ?
(1) −6.0 ஆகும். (2) −0.66 ஆகும். (3) −0.06 ஆகும். (4) +0.06 ஆகும். (5) +0.66 ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**3.** (i) செல்லிடத் தொலைபேசிகளுக்கான சந்தைக் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)

(ii) பொருளொன்றின் விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையிலான நேர்த் தொடர்பினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)

(iii) பொருளொன்றின் நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் 'ஏனைய பொருள்களின் விலை' என்பதனால் கருதப்படுவதென்ன ? (05 புள்ளிகள்)

(iv) "சுதந்திரமான சந்தை ஒன்றில் சமநிலையொன்று ஏற்பட வேண்டுமாயின் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையினை விடக் குறைந்தபட்ச நிரம்பல் தொகையானது குறைவாக இருத்தல் வேண்டும்." இக்கூற்றை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Qd = 150 - 5P$ (கேள்விச் சமன்பாடு)

$Qs = 75 + 10P$ (நிரம்பல் சமன்பாடு)

மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(i) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை (02 புள்ளிகள்)

(ii) சந்தைச் சமநிலையின்போது நிலவும் நுகர்வோன் மிகையின் பெறுமதி (03 புள்ளிகள்)

(iii) சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகங்களின் பெறுமதி (04 புள்ளிகள்)

(iv) அரசாங்கத்தினால் இப்பொருளின் மீது ரூ. 1.50 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின்,

(அ) வரியின் பின்னரான புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கத்தின் வரி வருவாய் (03 புள்ளிகள்)

(இ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் மாற்றத்தின் அளவு (03 புள்ளிகள்)

(ஈ) வரியின் காரணமாக சமூகத்திற்கு ஏற்படும் நலன் இழப்பின் அளவு (03 புள்ளிகள்)

**5.** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் ஒரு வருட காலப்பகுதிக்குரிய தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன. (சகல பெறுமதிகளும் ரூபா மில்லியனில்)

| | |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவீடு | 800 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 150 |
| இறக்குமதிகள் | 60 |
| உள்நாட்டு தனியார் முதலீடு | 200 |
| வெளிநாட்டுக் காரணி வருவாய் | 40 |
| கையிருப்பு மாற்றங்கள் | 50 |
| பெறுமானத்தேய்வு | 40 |
| ஏற்றுமதிகள் | 80 |
| வெளிநாட்டுக் காரணிச் செலுத்தல்கள் | 60 |
| மூலப்பொருள் கொள்வனவு | 20 |
| பங்குகளையும் பிணையங்களையும் கொள்வனவு செய்தல் | 15 |

(i) இப்பொருளாதாரத்தின்

(அ) மொத்தக் கேள்விச் சமன்பாட்டைப் பெறுக. (03 புள்ளிகள்)

(ஆ) மொத்த உள்நாட்டுச் செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

(இ) மொத்தத் தேசிய செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ஈ) தேறிய தேசிய செலவீட்டைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) எளிய பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதாரச் சமநிலையினை வரைபடமொன்றைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) எளிய முதலீட்டுப் பெருக்கியானது தேசிய வருமானத்தைத் தீர்மானிப்பதில் எத்தகைய செல்வாக்கினைக் கொண்டுள்ளது ? உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) பரிமாற்ற நோக்கப் பணக் கேள்விக்கும் வருமானத்திற்கும் இடையிலான தொடர்பினை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) நாடொன்றின் பண நிரம்பலைத் தீர்மானிக்கும்போது கடன் அட்டைகளைக் (credit cards) கவனத்திற் கொள்வதற்கும் செலவு அட்டைகளைக் (debit cards) கவனத்திற் கொள்ளாமைக்குமான காரணத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் எவை ? இக்குறிக்கோள்களை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நாடொன்றின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் பண்புசார் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

7. (i) சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் பிரதான வகிபாகத்தை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) பொருளாதார வகைப்படுத்தலுக்கு அமைய அரசாங்க செலவீடுகளை வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)
(iii) இலங்கையில் அரச பாதீட்டுக் குறைநிலையினை நிதியீட்டம் செய்வதற்கு அண்மைக் காலத்திற் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலாதாரங்கள் யாவை ? (05 புள்ளிகள்)
(iv) இலங்கையின் அரச பொதுப்படுகடன் வீதத்தின் அண்மைக்காலப் போக்கினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

8. இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் இயந்திரங்கள் மற்றும் ஆடைகள் ஆகிய இரு பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. தரப்பட்ட அளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தி இரு நாடுகளும் உற்பத்தி செய்யக்கூடிய இரு பொருள்களினதும் கருதுகோள் ரீதியான அளவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாடு | இயந்திரங்கள் (அலகுகள்) | ஆடைகள் (அலகுகள்) |
|---|---|---|
| சீனா | 50 | 150 |
| இலங்கை | 10 | 50 |

மேற்படி அட்டவணையிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் பகுதி (i), (ii) ஆகியவற்றுக்கு விடை தருக.
(i) இவ்விரு நாடுகளில் எந்நாடு, எப்பொருள் தொடர்பில் சிறக்குமியல்பு பெற வேண்டும் ? விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) சிறக்குமியல்பின் பின்னர் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மாற்று விகிதம் யாது ? (05 புள்ளிகள்)
(iii) தாராள வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கப் பயன்படும் தீர்வைத் தடைகள் மற்றும் தீர்வையல்லாத் தடைகள் எவை ? (05 புள்ளிகள்)
(iv) தாராள வர்த்தகத்தின் மீது நாடுகள் தடைகளை விதிப்பது ஏன் என விளக்குக. (05 புள்ளிகள்)

9. (i) பொருளாதார வளர்ச்சியை வரைவிலக்கணப்படுத்துக. அது எவ்வாறு அளவிடப்படும் ? (05 புள்ளிகள்)
(ii) நாடொன்றில் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த வகையில் தேசிய உற்பத்தியில் ஏற்படக்கூடிய கட்டமைப்பு மாற்றங்களை விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) 'பொருளாதார அபிவிருத்தியானது ஒரு பல்பரிமாணச் செயற்பாடாகும்.' விளக்குக. (05 புள்ளிகள்)
(iv) இலங்கையில் வறுமையின் அண்மைக்காலப் போக்குகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

10. (i) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தீர்மானித்த பிரதான காரணிகள் எவை ? (05 புள்ளிகள்)
(ii) இலங்கைப் பொருளாதாரத்தில் சேவைத்துறையின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) இலங்கையின் கைத்தொழிற்துறையில் உயர்வான வளர்ச்சியை ஏற்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை ? (05 புள்ளிகள்)
(iv) இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதான கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

***